1970 மார்ச் 24]

2. The total amount of tax involved in both the cases, that is, both the built-up areas and the vacant site.

3. The number of assessees who own urban land of less than two grounds and more than two grounds and the total amount of tax involved in each of the categories referred to in the items I have mentioned above. So, the Board has been asked to examine the matter and the report is awaited.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். மனைகளும் கிடைப்பதில்லை. அப்படியிருக்கும்போது, சிலர், பங்களாக்கள் என்ற பெயரில் '40-க்கு 60' என்ற அளவில் வீட்டை மட்டும் கட்டிக்கொண்டு, இரண்டு பர்லாங்கு தூரம் வெற்று இடம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு சூபர்-டாக்ஸ் போட அரசு முன்வருமா ? இல்லை என்றால், பங்களாக்கள் என்றால் இவ்வளவு கிரௌண்ட்தான் இருக்க வேண்டும் என்று ஒரு சீலிங் வைக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவைகளெல்லாம் ஒரு காலத்தில் வந்துதான் தீரும். மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் விரைவாக, சமூகத்தில் சிந்திப்பவர்கள் அதிகமாக ஆக, இதெல்லாம் வந்தே தீரும்.

THIRU K. VINAYAKAM : Sir, is it not a fact that when the concerned Bill was being debated in this House, the present Finance Minister who was then sitting in the Opposition moved an amendment to reduce the rate of tax from 4 per cent to .2 per cent. Can he now recollect from his memory and say whether what I have stated is not a fact?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் சொல்லுவது சரியானது அல்ல. எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். நாங்கள் வரவேற்று, இதை முற்போக்கானது, இது நிறைவேற்றப்பட வேண்டும் என்று உற்சாகத்தோடு வரவேற்றதாகத்தான் ஞாபகம்.

Production of Auto Cycles

* 520 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any licence has been issued to a Madras Firm for starting an Auto-Cycle Factory; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 1969-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில், ஆண்டொன்றுக்கு 50,000 வீதம் 'தானே இயங்கும் துவிச்சக்கர வண்டிகள்' தயார் செய்யும் திறன் உள்ள ஒரு தொழிற்சாலையை ஒரிசா மாநிலத்தில் நிறுவுவதற்கு, தொழில் உரிமம் ஒன்றினை, சென்னையைச் சேர்ந்த திரு இலக்குமி ஆட்டோ சைகிள் லிமிடெட்டுக்கு இந்திய அரசு வழங்கியுள்ளார்கள். வேறு விபரங்கள் ஒன்றும் இவ்வரசிடம் இல்லை.